கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

2025ம் வருடம் அக்டோபர் மாதம் 30ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.4/2025
இன்
அசல் வழக்கு எண்.243/2008
* * * *

போஸ் ... மனுதாரர்/வாதி

/ எதிரிடை /

1. சிங்கராஜ்
2. ராமாத்தாள்
3. கண்ணம்மாள்
4. முத்தம்மாள்
5. சின்னதாய்
6. பால்பாண்டி
7. பாப்பா
8. துரைப்பாண்டி
9. ராமர்
10. ஜெயமணி
11. அசோதை
12. கௌதம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு இன்று 30.10.2025ம் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.ஸ்ரீனிவாசன் அவர்கள் ஆஜராகியும்,

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் திரு.R.G.சங்கர்கணேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவானது கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை அனுமதித்து வழக்கு கோப்பில் சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்**

மனுதாரர்/வாதி தனது மனுவில், அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 09.03.2005ம் தேதி 1ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தை பொறுத்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், 12ம் பிரதிவாதியால் பொய்யான சங்கதிகளை கூறி அசல் வழக்கில்

எதிர்வழக்குரையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி பொய்யான எதிர்வழக்குரையை மறுத்து இந்நிர் மனுதாரர்/வாதியால் இந்த பதிலுரையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி பதில் வழக்குரையை தாக்கல் செய்து அதனை கோப்பிற்கு எடுக்கவேண்டி மனு தாக்கல் செய்ததாகவும் கூறியுள்ளனர்.

2) எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில், மனுதாரர்/வாதியின் இந்த இடைக்கால மனுவினை அனுமதிக்கக்கூடாது என்று குறிப்பிட்டு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) தீர்வு:-**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

3.1) அசல் வழக்கானது எழுவினா வனையப்பட்டு வழக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்/வாதி தரப்பால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை கோப்பிற்கு எடுக்கலாமா என்று பரிசீலிக்கையில், கடந்த 18.08.2025ம் தேதியன்று 12ம் எதிர்மனுதாரர்/12ம் பிரதிவாதியால் பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல்

செய்யப்பட்டுள்ளதாகவும், அதன்பொருட்டு இந்நிர் மனுதாரர்/வாதியால் மேற்படி 12ம் பிரதிவாதி குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மறுத்து இந்த எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ள சங்கதிகளை கருத்தில்கொண்டும், இந்நிர் மனுதாரர்/வாதியின் பதிலுரையானது வழக்கு விசாரணை ஆரம்பிக்காத நிலையில் மனுதாரர் தாக்கல் செய்த பதில் வழக்குரையை கோப்பிற்கு எடுப்பதில் எவ்வித சட்டப்படியான பாதிப்பும் இருதரப்பினருக்கும் ஏற்படபோவதில்லை என்பதை கருத்தில் கொண்டு இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்/வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று இந்த மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 30.10.2025ம் தேதியன்று இந்த திறந்த நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.30 17:46:49 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**இணைப்பு:-**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி:–** இல்லை

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:–** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.30 17:46:56 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.4/2025
இன்
அசல் வழக்கு எண்.243/2008
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்:30.10.2025